100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தைக் கொண்டுவந்த

ஒன்றிய பா.ஜ.க. அரசையும் – ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து

# சேலம் மேற்கு மாவட்டத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!



## மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிவிப்பு!

100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தைக் கொண்டுவந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும் – ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து இன்று (24.12.2025 – புதன்கிழமை) காலை 10.00 மணி அளவில், சேலம் மேற்கு மாவட்ட – மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் கீழ்க்கானும் அட்டவணைப்படி ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் முன்பு நடைபெற உள்ளது.

| வ. எண் | ஒன்றியம் | தலைமை | கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 1. | மேச்சேரி கிழக்கு, மேச்சேரி மேற்கு | டி.எம்.செல்வகணபதி எம்.பி. மாவட்ட கழக செயலாளர் | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், மேச்சேரி. |
| 2. | சங்ககிரி கிழக்கு சங்ககிரி மேற்கு | பி.தங்கமுத்து மாவட்ட கழக அவைத்தலைவர் | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், சங்ககிரி. |
| 3. | மகுடஞ்சாவடி வடக்கு, மகுடஞ்சாவடி தெற்கு | க.சுந்தரம் மாவட்ட கழக துணை செயலாளர் | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், மகுடஞ்சாவடி. |
| 4. | கொங்காணபுரம் வடக்கு, கொங்கணாபுரம் தெற்கு | அ.த.சம்பத்குமார் மாவட்ட கழக துணை செயலாளர் | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், கொங்கணாபுரம். |
| 5. | நங்கவள்ளி வடக்கு, நங்கவள்ளி தெற்கு, நங்கவள்ளி மத்தியம் | பி.பொன்னுசாமி மாவட்ட கழக பொருளாளர் | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், நங்கவள்ளி. |
| 6. | எடப்பாடி கிழக்கு, எடப்பாடி மேற்கு | எஸ்.எலிசபத்ராணி மாவட்ட கழக துணை செயலாளர் கவிஞர் கோனூர் வைரமணி தலைமை கழக பேச்சாளர் | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், எடப்பாடி. |
| 7. | தாரமங்கலம் மேற்கு ஒன்றியம் | பி.ஏ.முருகேசன் தலைமை செயற்குழு உறுப்பினர் | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், தாரமங்கலம். |
| 8. | கொளத்தூர் | மு.ராமநாதன் தலைமை செயற்குழு உறுப்பினர் | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், கொளத்தூர். |

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் அந்தந்த ஒன்றிய கழக செயலாளர்கள், அந்தந்த ஒன்றியங்களில் உள்ள மதச்சார்பற்ற கூட்டணி கட்சி நிர்வாகிகளை அழைத்து பேசி அவர்களுடன் இணைந்து நடத்திட வேண்டும். நம்முடைய கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் அனைவரையும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க உரிய ஏற்பாடுகளை ஒன்றிய கழக செயலாளர்கள் ஏற்பாடு செய்திட வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**டி.எம்.செல்வகணபதி எம்.பி.**
**செயலாளர், சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க.**

---

100 நாள் வேலைத் திட்ட ஒழிப்பு:
ஒன்றிய பா.ஜ.க. அரசையும் – ஒத்து ஊதும் அ.தி.மு.க. வையும் கண்டித்து

# அரியலூர் மாவட்டத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள்



## மாவட்டக் கழக செயலாளர் சா.சி.சிவசங்கர் அறிவிப்பு!

**நாள் : 24.12.2025 / நேரம் : காலை 10.00 மணி**

| வ.எண் | கலந்து கொள்ளும் ஒன்றிய கழகங்கள் | இடம் |
|---|---|---|
| 1. | அரியலூர் வடக்கு ஒன்றியம் அரியலூர் தெற்கு ஒன்றியம் அரியலூர் மத்தியம் ஒன்றியம் | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், அரியலூர். |
| 2. | திருமானூர் கிழக்கு ஒன்றியம் அரியலூர் மேற்கு ஒன்றியம் அரியலூர் மத்தியம் ஒன்றியம் | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், திருமானூர். |
| 3. | ஜெயங்கொண்டம் கிழக்கு ஒன்றியம் ஜெயங்கொண்டம் மேற்கு ஒன்றியம் ஜெயங்கொண்டம் மத்தியம் ஒன்றியம் | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், ஜெயங்கொண்டம். |
| 4. | தா.பழூர் கிழக்கு ஒன்றியம் தா.பழூர் மேற்கு ஒன்றியம் தா.பழூர் மத்தியம் ஒன்றியம் | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், தா.பழூர் |
| 5. | ஆண்டிமடம் கிழக்கு ஒன்றியம் ஆண்டிமடம் மேற்கு ஒன்றியம் ஆண்டிமடம் தெற்கு ஒன்றியம் | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், ஆண்டிமடம். |
| 6. | செந்துறை வடக்கு ஒன்றியம் செந்துறை தெற்கு ஒன்றியம் செந்துறை மேற்கு ஒன்றியம் | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், செந்துறை. |

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் நடைபெறும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் – மாநில நிர்வாகிகள் மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் மதச் சார்பற்ற கூட்டணிக் கட்சியைச் சார்ந்த நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் **சா.சி.சிவசங்கர்**
மாவட்ட கழக செயலாளர்,
அரியலூர் மாவட்டம்.


---

100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டுவந்த ஒன்றிய பா.ஜ.க அரசையும் - அதற்கு ஒத்து போகும் அ.தி.மு.க.வை கண்டித்து

# வேலூர் வடக்கு மாவட்டத்தில் கண்டன ஆர்ப்பாட்டங்கள்!

## மாவட்ட பொறுப்பாளர் D.M.கதிர் ஆனந்த் MP., அறிவிப்பு!

*100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டுவந்த ஒன்றிய பா.ஜ.க அரசையும் - அதற்கு ஒத்து போகும் அ.தி.மு.கவையும் கண்டித்து இன்று 24.12.2025 புதன்கிழமை காலை 10.00 மணியளவில் வேலூர் வடக்கு மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் கீழ்க்கண்ட அட்டவணையின்படி ஊராட்சி ஒன்றியங்களில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைப்பெறும் என மாவட்ட பொறுப்பாளர் D.M.கதிர் ஆனந்த் MP., அறிவித்துள்ளார்.*



அதன் விவரம் பின்வருமாறு:

| வ.எ | தொகுதி | ஒன்றியம் | நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 1. | காட்பாடி | காட்பாடி வடக்கு ஒன்றியம் காட்பாடி தெற்கு ஒன்றியம் காட்பாடி கிழக்கு ஒன்றியம் காட்பாடி மேற்கு ஒன்றியம வாலாஜா மேற்கு ஒன்றியம் | ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில், காட்பாடி. |
| 2. | கே.வி.குப்பம் | கே.வி.குப்பம் கிழக்கு ஒன்றியம் கே.வி.குப்பம் மத்திய ஒன்றியம் கே.வி.குப்பம் மேற்கு ஒன்றியம் | ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில், கே.வி.குப்பம். |
| 3. | கே.வி.குப்பம் | குடியாத்தம் வடக்கு ஒன்றியம் குடியாத்தம் தெற்கு ஒன்றியம் குடியாத்தம் கிழக்கு ஒன்றியம் | ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில், குடியாத்தம். |

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்ட, கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், இளைஞர் அணி உள்ளிட்ட 23 சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி நிர்வாகிகள் மற்றும் விவசாய பெருமக்கள் அனைவரும் தவறாமல் கலந்துக்கொண்டு ஆர்ப்பாட்டம் வெற்றிப்பெற செய்திட வேண்டுமாய் வேண்டுகிறோம்.

**D.M.கதிர் ஆனந்த் MP.,**
மாவட்ட கழகப்பொறுப்பாளர்
வேலூர் வடக்கு மாவட்ட திமுக.

---

ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# நெல்லை மத்திய மாவட்டத்தில் ஆர்ப்பாட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. அறிக்கை!



*நெல்லை, டிச.24-*

*முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க 100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தியும்,எளிய மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும், அதை ஆதரிக்கும் அ.தி.மு.க.வையும் கண்டித்தும், மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. என நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

*அதுபற்றிய விவரம் வருமாறு:-*


*நெல்லை மத்திய மாவட்ட மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் இன்று (24.12.2025 புதன்கிழமை) காலை 10.00 மணியளவில், மானூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில், மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.*

*நெல்லை மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, பகுதி, கழக நிர்வாகிகள், ஒன்றிய,பேரூர், கழக நிர்வாகிகள், வட்ட கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் கழக உடன்பிறப்புகள் மற்றும் மதச்சார்பற்ற கூட்டணி கட்சிகளின் அனைத்து நிர்வாகிகளும் பங்கேற்று கண்டனத்தை தெரிவிக்க கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அதில் கூறியுள்ளார்.*

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மதுரை ஏ.ஆர்.சந்திரன்
### டிசம்பர் 24 (2008)



பள்ளியில் படிக்கின்ற காலத்திலேயே பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர் மீது தீவிரப் பற்றுக் கொண்டு கழகப் பணிகளில் ஈடுபட்டவர். கழக மாநாடுகள் அனைத்திலும் பங்கேற்றவர். மதுரை முத்துவுடன் சேர்ந்து கழகம் வளர்க்கப் பாடுபட்டவர்.

கழகம் தொடங்கிய காலத்தில் மதுரை வடக்கு மாசி வீதியில் “மறுமலர்ச்சி படிப்பகம்” என்ற படிப்பகத்தைத் தொடங்கி அதில் முரசொலி, நம்நாடு, திராவிட நாடு போன்ற ஏடுகளை வழங்கி கழகத் தோழர்களையெல்லாம் படிக்க வைத்தவர்.

தலைவர் கலைஞர் அவர்களின் வாழ்த்துகளுடன் மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவராக நியமிக்கப்பட்டு தலைவர் கலைஞர் அவர்களிடம் சிறந்த கூட்டுறவு வங்கி என்ற பாராட்டைப் பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**